DMC CUM JM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 149 /2021, Kunnam P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருநாவுக்கரசு | Caste | : | - |
| Father/ Husband Name | : | கந்தசாமி | Calling | : | வழக்கறிஞர் |
| Village | : | கல்லம்புதூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 56 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.02.2025. | | | | | |

A1,A5,A9,A10 Present. A4,A6,A7,A8 Absent 317 CrPC filed.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். 12.09.2019 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் எனது தந்தை கந்தசாமி என்பவரும், எங்களுக்கு சொந்தமான நிலத்தை பார்வையிட சென்றோம். அப்போது எதிரிகள் 7 பேர் செல்லம்மாள், கோவிந்தன், ரித்திகா, காசி, டிராக்டர் ஓட்டுநர் சின்னதுரை, மற்றும் சிலர் அங்கே நிலத்தில் உழவுஓட்டி கொண்டிருந்தார்கள். எங்கள் நிலத்தில் உழவு ஓட்டக்கூடாது என்று நானும் எனது தந்தையாரும் உழவு ஓட்டுவதை மறித்தோம். அப்பொழுது டிராக்டர் டிரைவர் என் மீது டிராக்டரை ஏற்றி கொலை செய்ய முயற்சித்தார். மற்றும் செல்லம்மாள் என்பவர் என்னை கழுத்தை நெறித்து கீழே தள்ளினார். செல்லம்மாளின் தந்தை கோவிந்தன் என்பவர் கட்டையை தூக்கி என் மீது அடித்தார்.

2. நான் அதை தடுத்து நிறுத்தி விட்டேன். உடனே அங்கிருந்து நானும் எனது தந்தையும் காரில் குன்னம் வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் மருத்துமவனை சென்று நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனது தந்தையார் OP ஆக சிகிச்சை பெற்று வீட்டுக்கு சென்றுவிட்டார். 13.09.2019 ம் தேதி என்னை காவல் நிலையத்தில் இருந்து சாவித்திரி என்பவர் என்னிடம் வாக்குமூலம் பெற்று சென்றார். நான் நடந்த விபரத்தை அவரிடம் கூறினேன். அவர் என்னிடம் கைப்பட எழுதி கையொப்பம் பெற்றுக்கொண்டார். சம்பவ இடத்தில் நடந்த வீடியோ மற்றும் போட்டோக்களை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். (புகார்தாரரால் கொடுக்கப்பட்ட புகார் **அ.சா.ஆ 1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது) வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> :-

1. சொத்து எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது. உயில் யாரால் எழுதி வைக்கப்பட்டது என்றால் எனது அம்மாவிற்கு அவருடைய அம்மாவும், எனக்கு எனது தாய்மாமாவும் உயில் எழுதி கொடுத்துள்ளார். எனது தாய்மாமாவின் பெயர் ராமசாமி ஆகும். சொத்துக்கள் எனது அம்மாவிற்கு உயில் மூலம் கிடைத்தது என்ற விபரத்தை நான் எனது புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ சொல்லி இருக்கிறேனா என்றால் எங்களது சொத்து என்பதால் அதை பற்றி சொல்லவில்லை. உயில் மூலம் ராமசாமி எழுதி வைத்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்களும் இருந்தது, அவரால் கிரயம் பெறப்பட்ட சொத்துக்களும் இருந்தது. ராமசாமி அரசாங்க உத்யோகத்தில் இருந்தாரா என்றால் இல்லை. விவசாயம் தான் செய்து வந்தார்.

2. ராமசாமிக்கு பெரியசாமி என்ற ஒரு பையன் தற்போது உயிருடன் இருந்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு 1-ம் எதிரி செல்லம்மாள் என்பவரை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் விவகாரத்து ஆகிவிட்டதா என்றால் இல்லை. அவர்கள் தற்போது கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறாரார்களா என்றால் இல்லை. பெரியசாமியை அழைத்து வந்து பெரியசாமியும் செல்லம்மாளும் தற்போது கணவன் மனைவியாக வாழவில்லை என்பதை சாட்சியம் மூலம் நிரூபிக்க முடியுமா என்றால் பெரியசாமி மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார். பெரியசாமி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கு ஆவணங்கள் எதையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது தாய்மாமா ராமசாமி எனக்கு எழுதி கொடுத்த உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரிதான். அந்த உயிலில் ராமசாமி தன்னுடைய பாகத்தை மட்டும் குறிப்பிடாமல் எல்லா பாகத்தையும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் குறித்து உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் யாரை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் எனது பெரியம்மா சோலையம்மா என்பவரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். அசல் வழக்கு எண். 659/2014 ல் நான் யாரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் அரசை மட்டும் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்.

DMC KUMBAKONAM

4. அந்த வழக்கில் உரிய தரப்பினர்களை சேர்க்காமல் அரசை மட்டும் தரப்பினராக சேர்த்துக்கொண்டு பெறப்பட்ட தீர்ப்பின் மூலம் எனக்கு சொத்தில் எந்த உரிமையும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மாமா ராமசாமி எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் உயில் அவரால் எழுதிக்கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும், மேற்படி உயிலானது என்னுடைய ஜுனியர் வழக்கறிஞரை கொண்டு மோசடியாக எழுதப்பட்டு அதன்மூலம் ராமசாமியின் மகனான பெரியசாமியை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்ட உத்தரவு செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

5. நான் சொத்தை 20 ஆண்டுகாலமாக அனுபவித்து வருவது பொய் என்றாலும், தாவா சொத்தில் நாங்கள் ஒருபோதும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. சொத்து தொடர்பாக பட்டா எனது பெயரில் ஏற்படவில்லை என்றால் சரிதான், அது தொடர்பாக நான் நீதிமன்றத்தில் வட்டாட்சியரை பட்டா மாற்றம் செய்யக்கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேன். நான் ஏற்கனவே பட்டா மாற்றம் கோரி தாசில்தாரிடம் மனு செய்திருந்தபோது அவர் பட்டா மாற்றம் செய்ய இயலாது என உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்கவில்லை, நீதிமன்றம் மூலம் பட்டா மாற்றம் செய்ய சொல்லி சொல்லி இருக்கிறார்.

6. சொத்து என்னுடைய சொத்து அல்ல என்றாலும் அது தற்போது வரை 1-ம் எதிரி மற்றும் அவருடைய கணவராக பெரியசாமி அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, பெரியசாமியும் 1-ம் எதிரியும் நிலத்தில் உழவு செய்து கொண்டிருந்தபோது நான்தான் ஆட்களோடு சென்று அவர்களை மிரட்டியடித்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக 1-ம் எதிரி என் பெயரோடு சேர்த்து மற்ற 7 நபர்கள் மீது குன்னம் காவல் நிலையத்தில் அ ன்றைய தினமே புகார் கொடுத்துள்ளார் என்றால், நான் புகாருக்கு எதிராக அவர்கள் புகார் கொடுத்துள்ளார்கள்.

7. 1-ம் எதிரிதான் முதலில் காவல் நிலையத்தில் 12.09.2019 ம் தேதி புகார் கொடுத்துள்ளார் என்றாலும், நான் அந்த தகவல் கேள்விப்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி கொடுத்த புகார் மீது காவல் நிலையத்தில் உரிய நடவடிக்கை எடுக்காமல் காவல் நிலையத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னதன்பேரில் நான் மருத்துவமனையில் சேர்ந்து கொண்டு மறுநாள் 13.09.2019 ம் தேதி புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

DMC KUNNAM

நான் பெரியசாமியை தரப்பினராக சேர்க்காமல் தீர்ப்பு பெற்ற அசல் வழக்கு எண். 659/2014 தீர்ப்பானது இல்லா நிலையது என்று அறிவிக்க கோரி 1-ம் எதிரி மற்றும் அவரது கணவர் பெரியசாமி இருவரும் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 523/2021 என வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

8. சொத்தை 1-ம் எதிரி மற்றும் அவரது கணவர் பெரியசாமி இடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்ற காரணத்தில் தான் நான் 1-ம் பிரதிவாதி மற்றும் மற்ற நபர்கள் மீதுஇந்த பொய் புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி என் மீது மற்றும் 6 நபர்கள் மீதும் கொடுத்த புகார் குற்ற எண். 257/2019 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எந்த தவறும் செய்யாத எதிரிகள் மீது நான் பொய்யான புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. சிவில் வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் 1-ம் எதிரியின் கணவரான பெரியசாமியை கடத்தி சென்று அவரிடம் கையெழுத்து வாங்க முற்பட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக 1-ம் எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காததால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்ததன்பேரில் தான் நான் பெரியசாமியை கொண்டு வந்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரியல்ல, இது சம்பந்தமாக 1-ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் அவருக்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் இந்த வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJMCOURT, KUNNAM